அது ஒரு இலையுதிர்காலம் தொடங்கும் சமயம். எர்த்தாம்டன் நகரம் வரப்போகும் காலத்திற்கு தன்னை ஆயத்தமாக்கிக் கொண்டிருந்தது. இலையுதிர்காலம் தொடங்கி விட்டதால், கொஞ்சம் கொஞ்சமாக சூரியனின் கதிர்கள் வீக்கம் அடையும் காலம்; குளிர்ந்த காற்று மெதுவாக வர ஆரம்பிக்கும் காலம். மரங்கள் எல்லான் ஒவ்வொன்றாக தனது இலைகளை உதிர்க்க ஆரம்பிக்கும் காலம். எர்தாம்டனில் இலையுதிர்காலம் என்றால், அருணின் வீட்டில் ஜலதோக்ஷம் தொடங்கும் காலம் என்று வைத்துக் கொள்ளலாம். அது என்னவோ தெரியவில்லை, ஜலதோக்ஷத்தில் அருணு படும் கக்ஷ்டம் அவனது அம்மா கீதாவிற்கும், அப்பா ரமேக்ஷிற்கும் என்ன செய்வது என்று புரியாமல் அவர்களுக்கு வேதனை கொடுத்தது.

கீதா, அருணின் ஜலதோக்ஷ தொல்லையைப் போக்க பல விதமான மருந்துகள் கொடுத்துப் பார்த்தார். எதற்கும் மசிந்த மாதிரி தெரியவில்லை அந்த ஜலதோக்ஷம். அவர்கள் ஊரில் உள்ள எல்லாக் கடைகளிலும் Hortianna நிறுவனத்தின் மருந்துகள் மட்டுமே விற்பனை ஆயின. அது கீதாவிற்கு மிகவும் கோபத்தை கொடுத்தது. நகர மேயர் ரோஸ்வுட் (Rosewood) அவர்களிடம் எவ்வளவோ மனுக்கள் (petitions) கொடுத்தும், அவரால் Horitianna நிறுவனத்தின் ஆக்கிரமத்தை ஒன்றும் செய்யமுடியாமல் இருந்தது. வேறு நல்ல மருந்துகள் இருந்தாலும், அந்த சுத்து வட்டாரத்தில் Hortianna நிறுவனத்தின் ஆதிக்கத்தினால் அவர்கள் தயாரிக்கும் மருந்துகள் மட்டுமே எர்தாம்டனில் கிடைத்தன. நகர மக்களுக்கு அது ஒரு சாபக்கேடாக இருந்தது. சில சமயங்களில், வெளி ஊர்களுக்கு சென்றாலோ, அல்லது, வெளி ஊர்களில் இருந்து யாராவது வந்தாலோ, வேறு நிறுவனங்களின் மருந்துக்கள் அங்கிருந்த சில குடும்பங்களுக்கு கிடைத்தன. அப்படி இல்லாவிட்டால், Hortianna நிறுவனமே கதி என்று இருந்தது.

‘அச்சூ! அச்சூ!’’ என்று அருண் தும்மினான். ‘’அச்சூ! அச்சூ!’’ என்று இன்னும் சத்தத்தோடு தும்மினான்.

‘’போச்சுடா, fall season ஆரம்பிச்சாச்சா?’’ என்று கேட்டுக் கொண்டே, ரமேக்ஷ வந்தார். ‘’மரத்துல இலை உதிருதோ இல்லையோ, நம்ம அருண் பையனுக்கு ஜலதோக்ஷம் வந்திரும்.’’

அருண் அருகே வந்து, செல்லமாக தலையைக் கோதினார்.

‘’எப்படி இருக்கு, கண்ணா?’’ என்று கேட்டார் பரிவுடன். அவருக்கு தெரியும் அவன் ஜலதோக்ஷத்தினால் பட்ட அவஸ்தைகள்.

‘’அச்சூ!’’ என்று பதில் வந்தது.

‘’மருந்து கொடுத்தியா கீதா?’’ என்று தன் மனைவயை பார்த்து கேட்டார்.

‘’அச்சூ, அச்சூ’’ என்று தொடர்ந்து தும்மினான். அந்தத் தும்மல், அருண் ‘’ஆமாம்’’ என்று பதில் அளித்தது போன்று இருந்தது.